RNINO:TNTAM/2021/82250 www.dinamadaidaily.com

வெளியீட்டாளர்: டாக்டர். மு.ஹிட்லர் சுந்தர்ராஜன் எம்.ஏ.,
dinamadai2021@gmail.com

# தினமடை

DINAMADAI MORNING DAILY மறைக்கப்பட்ட செய்தி திறக்கப்படும்..., தமிழ் காலை நாளிதழ்

Chennai Volume : 04 Issue :365 03.10.2025 Friday page-4 Rs.5

## ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு நினைவு நாணயத்தை பிரதமர் வெளியிடும் அவல நிலை.. முதல்வர் ஸ்டாலின் கண்டனம்

சென்னை: நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் அஞ்சல் தலை, நினைவு நாணயத்தை பிரதமர் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். மகாத்மா காந்தியடிகளின் 157 வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற காந்தியடிகளின் 157வது பிறந்த நாள் நிகழ்ச்சியின்போது, எழும்பூரில் உள்ள அருங்காட்சியக வளாகத்தில் காந்தியின் சிலை முன்பு வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார் முதலமைச்சர் ஸ்டாலின். அந்த புகைப்படத்தை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள முதலமைச்சர், பிரதமர் நரேந்திர மோடியை கடுமையாக விமர்சித்துள்ளார். இது குறித்து தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், "நமது இந்தியா, அனைத்து மத மக்களுக்குமான மதச்சார்பற்ற நாடு எனும் அடிப்படைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகள்!" என குறிப்பிட்டுள்ளார். மேலும், "மக்களிடையே வெறுப்பின் விதைகள் தூவப்பட்டு, பிரித்தாளும் சக்திகள் தலைதூக்கும்





போதெல்லாம் அவற்றை எதிர்கொள்ளும் வலிமையை நமக்கு என்றும் வழங்கும் ஆற்றல் அவர்" என புகழாரம் சூட்டியுள்ளார். அதோடு, பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்துள்ள முதல்வர் ஸ்டாலின், "நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும்! இதுவே காந்தியடிகளின் பிறந்தநாளில் நாட்டு மக்கள் அனைவரும் ஏற்கவேண்டிய உறுதிமொழி!" எனத் தெரிவித்துள்ளார். முன்னதாக, ஆர்.எஸ்.எஸ் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி, பாரதமாதா உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்டார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டுக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய அவர், ஒருபுறம் தேசியச் சின்னம், மறுபுறம் பாரதமாதா சிங்கத்தின் மீது அமர்ந்திருப்பது போலவும், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் பாரதமாதாவை வணங்குவது போலவும் நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் வரலாற்றில் நாணயங்களில் பாரதமாதா உருவம் வெளியாவது இதுவே முதல்முறை என்றார். ஆர்.எஸ்.எஸ். முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அஞ்சல்தலையும் வெளியிடப்பட்டது. அதில் 1963இல் குடியரசு தின அணிவகுப்பில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பங்கேற்றதை குறிக்கும் வகையில் அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. இதனைக் குறிப்பிட்டே முதல்வர் ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

## ரஷ்ய அதிபர் புதின் டிசம்பர் மாதம் இந்தியா வருகிறார்!


புதுடெல்லி: எதிர்வரும் டிசம்பர் மாதம் ரஷ்ய அதிபர் புதின் இந்தியா வரவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதற்கு முன்னதாக அடுத்த மாதம் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், இந்தியா வருவதாகவும், அப்போது புதினின் பயணம் இறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத் திட்டத்தின்படி ரஷ்ய அதிபர் புதின், இந்தியா வரும்போது பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்திப்பு இருதரப்புக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதினின் இந்திய பயணம் ஒருநாள் பயணமா அல்லது இரண்டு நாள் பயணமா என்பது இறுதி செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணி தற்போது நடைபெற்று வருவதாக தகவல். கடைசியாக கடந்த 2021ல் புதின் இந்தியா வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சந்திப்பின் போது இருநாட்டு ராணுவத்தின் செயல்பாடு, வணிக ரீதியான உறவு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து பிரதமர் மோடியும், புதினும் பேசுவார்கள்



என எதிர்பார்க்கப்படுகிறது. இருநாட்டுக்கு இடையிலான உறவை மதிப்பாய்வு செய்யும் வகையில் இந்தியா மற்றும் ரஷ்யா இடையில் ஆண்டுதோறும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது உண்டு. கடந்த ஆண்டு ஜூலை மாதம் ரஷ்யாவில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். கடந்த மாதம் சீனாவில் ரஷ்ய அதிபர் புதினும், பிரதமர் மோடியும் சந்தித்து பேசினர். இருவரும் காரில் அமர்ந்தபடி நீண்ட நேரம் பேசியது கவனம் ஈர்த்தது. அதற்கு சில நாட்களுக்கு முன்புதான் இந்தியாவுக்கு 25 சதவீதம் கூடுதல் வரி விதித்தது அமெரிக்கா. ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்த வேண்டும் என சொல்லி இந்த கூடுதல் வரியை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். தற்போது இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதித்துள்ளது அமெரிக்கா. ரஷ்யா மற்றும் இந்தியா இடையிலான உறவு இருநாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது சர்வதேச அளவிலான அமைதி, ஸ்திரத்தன்மை சார்ந்து முக்கியத்துவம் வாய்ந்தது என பிரதமர் மோடி கருத்து தெரிவித்திருந்தார். டிசம்பரில் நடைபெறும் இந்த சந்திப்பின் போது ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் குறித்தும் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திமுக ஆட்சியில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 61% அதிகரிப்பு: அன்புமணி

சென்னை: திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 60.66% அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டை குழந்தைகள் பாதுகாப்பாக வாழ்வதற்கு தகுதியற்ற மாநிலமாக மாற்றியது தான் திமுக அரசின் சாதனை. இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத வகையில் 6968 ஆக அதிகரித்திருப்பதாகவும், 2023ஆம் ஆண்டில் மட்டும் 67 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் வாழத்தகுதியற்ற மாநிலமாக தமிழ்நாட்டை திமுக அரசு மாற்றியிருப்பது கண்டிக்கத்தக்கது. திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன் அதிமுக ஆட்சியில் 2020 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 4338 ஆக இருந்தது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு 2021ஆம் ஆண்டில் 6064 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 6580 ஆகவும், 2023ஆம் ஆண்டில் 6968 ஆகவும் அதிகரித்திருக்கிறது. அதிமுக ஆட்சியில் நடந்த குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுடன் ஒப்பிடும் போது திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் குற்றங்களின் எண்ணிக்கை 60.66% அதிகரித்திருக்கிறது. 2023ஆம் ஆண்டில் 67 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு



படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2022ஆம் ஆண்டில் 81 குழந்தைகள், 2021ஆம் ஆண்டில் 69 குழந்தைகள் என திமுக ஆட்சியில் மொத்தம் 217 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். திமுக ஆட்சியில் மொத்தம் 7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வளர்ச்சியடைந்து விட்டது, சிசுக்கொலைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன என ஆட்சியாளர்கள் பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் 28 குழந்தைகள் சிசுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். திமுக ஆட்சிக்கு வந்த நாளில் இருந்தே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இந்த புள்ளிவிவரங்களின் மூலம் உறுதியாகியிருக்கிறது. தமிழ்நாட்டின் அனைத்து மூலைகளிலும் மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் தாராளமாக கிடைப்பது, குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல்துறை செயலிழந்து தடுமாறுவது போன்றவை தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் ஆகும். இதற்கு காரணமான திமுக அரசு தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும். குற்றங்களுக்கு குறித்த காலத்தில் தண்டனை வழங்கப்பட்டால் தான் குற்றம் செய்பவர்கள் திருந்துவார்கள். அந்த விஷயத்திலும் திமுக அரசு படுதோல்வி அடைந்து விட்டது. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான தமிழக மாவட்டங்களில் 53 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில், இதுவரை 20 நீதிமன்றங்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அதனால் 60% போக்சோ வழக்குகள் விசாரிக்கப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. தமிழ்நாட்டை குழந்தைகள் பாதுகாப்பாக வாழ்வதற்கு தகுதியற்ற மாநிலமாக மாற்றியது தான் திமுக அரசின் சாதனை ஆகும். இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். தெய்வங்களாக போற்றப்பட வேண்டிய குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கத் தவறிய திமுக அரசுக்கு வரும் தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

## விஜய் சுயமாக சிந்திக்கவில்லை; உசுப்பேற்றி பேச வைத்துள்ளனர் திருமாவளவன் கருத்து

சென்னை: கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக விஜய் வெளியிட்ட வீடியோவில் சுயமாக சிந்தித்து பேசியதாக தெரியவில்லை. அவரை சுற்றிலும் உள்ளவர்கள் உசுப்பேற்றி இதுபோல பேச சொல்லியுள்ளனர். அவர் எப்போது சுயமாக சிந்தித்து செயல் திட்டங்களை வரையறுக்கிறாரோ, அப்போதுதான் அவருக்கு நல்ல அரசியல் எதிர்காலம் உருவாகும் என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவன், "செந்தில் பாலாஜி மட்டுமே குற்றவாளி என்று விஜய் சொல்ல விரும்புகிறாரா? அவர் என்ன வகையான குற்றங்களை செய்தார் என சொல்கிறார். 'ஆட்களை அனுப்பினாரா? கல் எறிந்தாரா? அதனால் தடியடி நடத்தப்பட்டு கூட்ட நெரிசல் ஏற்பட்டதா?' இதெல்லாம் அரசியல் நேர்மையற்ற குற்றச்சாட்டு. இது கூட்ட நெரிசல் உயிரிழப்புகள்தான் ஒரு சதுர மீட்டரில் 4 அல்லது 5 பேர்தான் நிற்க முடியும். அங்கே 10 முதல் 15 பேர் நின்றிருக்கிறார்கள். 10 மணி நேரம் காத்திருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட கூட்ட




நெரிசலில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இது 100 சதவீதம் கண்கண்ட உண்மை. அதனை மறைத்து சதி என்று சொல்வதும், திமுக அரசு மீது பழி போடுவதும் ஆபத்தான அரசியல். அவருக்கே இது நல்லதல்ல. விஜய் இதனை சுயமாக சிந்தித்து சொன்னதாக தெரியவில்லை. அவரை சுற்றிலும் உள்ளவர்கள் உசுப்பேற்றி இதுபோல பேச சொல்லியுள்ளனர். விஜய் எப்போது சுயமாக சிந்தித்து செயல் திட்டங்களை வரையறுக்கிறாரோ, அப்போதுதான் அவருக்கு நல்ல அரசியல் எதிர்காலம் உருவாகும். பாஜக தரப்பிலிருந்து ஒரு குழு வந்துள்ளது. அதற்கான தேவை என்ன? விஜய் மீது தவறு இல்லை, அரசு மீதுதான் தவறு என உடனடியாக அண்ணாமலை பேசுகிறார். இது அவர்களுக்கே எதிராக முடியும். எங்கள் கட்சி தொண்டர்கள் எல்லாம் கூட்டத்தில் ஆம்புலன்ஸ் வந்தால், வழிவிட்டு நிற்பார்கள். ஆம்புலன்ஸ்கள் நோயாளியை அழைக்க செல்லும்போது ஆள் இல்லாமல்தான் போகும். பின்னர் நோயாளியை ஏற்றி ஆளோடு செல்வார்கள். இதெல்லாம் என்ன பேச்சு. இது நாகரீகமான அரசியலா?" எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.



அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்தநாளையொட்டி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் அருகில் காமராஜர் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கதர் கிராம அலுவலகத்தில், சிறப்புத் தள்ளுபடி விற்பனையினை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் உட்பட பலர் உள்ளர்கள்.

# மின்இயக்கத்தின் ஒரு பகுதியாக சூரிய சக்தியில் இயங்கும் மின்சார சார்ஜிங் நிலையத்தை ICF அறிமுகப்படுத்துகிறது



மின் இயக்கத்தின் ஒரு பகுதியாக சூரிய சக்தியில் இயங்கும் மின்சார சார்ஜிங் நிலையத்தை மிசிதி அறிமுகப்படுத்துகிறது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஏற்றுக்கொள்வதில் மிசிதி முன்னணியில் உள்ளது, 2009 முதல் பசுமை ஆற்றல் மூலம் அதன் மின் ஆற்றல் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யும் ஒரே உற்பத்தி அலகு இதுவாகும். இந்தப் புதிய முயற்சி, நிலைத்தன்மைக்கான ICF இன் உறுதிப்பாட்டையும், நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைவதற்கான அதன் நோக்கத்தையும் வலுப்படுத்துகிறது. நிலையான தொழில்துறை நடைமுறைகளில் முன்னோடியாக இருக்கும் ஒருங்கிணைந்த பயிற்சியாளர் தொழிற்சாலை (ICF), அதன் வளாகத்தில் இருசக்கர வாகனங்களுக்கு சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வாகன (EV) சார்ஜிங் நிலையத்தை நிறுவுவதன் மூலம் சுற்றுச்சூழல் மேலாண்மையை நோக்கி மற்றொரு குறிப்பிடத்தக்க படியை எடுத்துள்ளது. அதன் தற்போதைய பசுமை ஆற்றல் முயற்சிகளுக்கு இணங்க, ஷெல் - ்பர் பிரிவின் நிர்வாக கட்டிடங்களின் பார்க்கிங் பகுதிகளில் ICF EV சார்ஜிங் நிலையத்தை நிறுவியுள்ளது. இந்த வசதி 5 kWp ஆன் கிரிட் கூரை சூரிய மின் நிலையத்தால் இயக்கப்படுகிறது மற்றும் ஷெல் - ்பர்னிஷிங் பிரிவுகளில் தலா மூன்று மின்சார இரு சக்கர வாகனங்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யும் திறன் கொண்டது. ஒவ்வொரு சார்ஜிங் பாயிண்டிலும் 16கி சாக்கெட் பொருத்தப்பட்டுள்ளது மற்றும் அதிக மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் மற்றும் அதிக மின்னோட்ட பாதுகாப்பு உள்ளிட்ட மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது. இந்த சார்ஜிங் வசதி QR குறியீடு ஸ்கேனர் பயன்பாட்டின் மூலம் ICF ஊழியர்களுக்கு மட்டுமே. EV பெருக்கத்தை ஊக்குவிக்க ICF ஊழியர்களுக்கு சார்ஜிங் இலவசம். மின்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக சூரிய சக்தியில் இயங்கும் EV சார்ஜிங் நிலையத்தை இந்த பொது மேலாளர் யு. சுப்பா ராவ் திறந்து வைத்தார், மேலும் நிறுவனத்திற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகளை மேம்படுத்துவதில் அவர்களின் புதுமையான அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பு முயற்சிகளுக்காக மின்சாரத் துறையைப் பாராட்டினார். செய்தி/போட்டோ: வி. கணேசன்.

# கடலூர் இலக்கியச் சோலையின் சார்பில் கவியரங்கம்




கடலூர் இலக்கியச் சோலை சார்பில் "மீண்டும் வருவீர்களா "என்கிற தலைப்பில் முனைவர் ந. பாஸ்கரன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது, விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பாச்சுடர் வளவ. துரையன் வரவேற்றார் முன்னதாக கவிஞர் குறிஞ்சி ந. இரவி "திருக்குறள்" அலர் அறிதல் என்கிற தலைப்பில்குறள் விளக்கம் அளித்தார், கவியரங்கத்தில்"அவ்வையார்" என்கிற தலைப்பில் டே.மகேஸ் வரியும்,"அம்பேத்கர்" என்ற தலைப்பில் விடுதலையும்,"காமராஜர்"என்ற தலைப்பில் க.ரமேஷும்,"பாரதியார்" என்ற தலைப்பில் ப.செந்தில் முருகனும் "அண்ணா" என்ற தலைப்பில் அன்பன் சிவாவும்"பெரியார்" என்ற தலைப்பில் க. எதிலேந்தியும் கவிதை வாசித்தார்கள், நிகழ்ச்சியில் வழக்குரைஞர் மன்றிவாணன், நம்.கார்மேகவண்ணன், வேணுகோபால், வடிநிலம் ராதாகிருஷ்ணன், கடலூர் மாவட்ட தமிழ் சங்கத்தின் செய்திப் பிரிவு செயலாளர் கவிஞர் ம.ரா. சிங்காரம், இணைச்செயலாளர் கவிஞர் ராம. ஜெகதீசன், கோவி. ஜெயராமன்,கௌ.செ. குமார், நம்.அன்பழகன், உமாமகேசுவரி,சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.இறுதியில் ஓவியர் க. ரமேஷ் நன்றி கூறினார்.



கடலூர் மாவட்டம், பூண்டியாங்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளியின் சார்பில் சோனககனசாவடியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது, விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. பி. அருண் தலைமை தாங்கினார், முதுகலை தாவரவியல் ஆசிரியை திருமதி சிவசங்கரி முன்னிலை வகித்தார், சிறப்பு விருந்தினர்களாக கடலூர் அரசு தலைமை மருத்துவமனை நூலக வாசகர் வட்ட தலைவர் கவிஞர் ம.ரா சிங்காரம் "நால்படி "என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார், நிகழ்ச்சியில் செந்தமிழ் இலக்கிய பேரவை கடலூர் மாவட்ட தலைவர் ந. சுந்தர்ராஜா, கடலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மனோகரன், நாட்டு நலப்படிப்பட்ட ஒருங்கிணைப்பாளர் தினமணி, பழனிவேல், உடற்கல்வி ஆசிரியர் அருண், கன்னபாலன் ஆகிய ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள், இறுதியில் முதுகலை கணித ஆசிரியர் முரளி மனோகர் நன்றி கூறினார்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்தநாளையொட்டி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவ படத்திற்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சேதுராஜன், அலுவலக மேலாளர் (நீதியியல்) செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்



தென்காசி மாவட்டம், செங்கோட்டை அருகே பண்பொழியில் அமைந்துள்ள அறம் வளர்த்த நாயகி நகரீஸ்வரர் கோயிலில், புரட்டாசி நவராத்திரி விழாவை முன்னிட்டு திருமணமாகாத 108 கன்னி பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்க வேண்டியும் மற்றும் மாங்கல்ய பலம் அதிகரிப்பதற்காக திருமணமான பெண்களுக்கு சுமங்கலி பூஜையும் நடத்தப்படுவது வழக்கம். அந்த வகையில், நவராத்திரி விழாவை முன்னிட்டு இரவில் கொலு மண்டப உற்சவ அம்பாளுக்கு சோடஷ மகா தீபாராதனை, மந்திர புஷ்பம், சதுர்வேத, திருமுறைப் பாராயணங்கள் நடைபெற்றன. நவராத்திரி விழாவில் அம்மன் சரஸ்வதி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இந்த பூஜையில் பங்கேற்ற 108 கன்னி பெண்கள் மற்றும் சுமங்கலி பெண்களுக்கு புடவை உள்ளிட்ட பிரசாதம் வழங்கப்பட்டது. இதேபோல மாணவ மாணவிகளுக்கு சரஸ்வதி பூஜை செய்யப்பட்ட நோட்டுகள் வழங்கப்பட்டது. இந்த பூஜையில் சுற்று வட்டாரத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளைபண்பொழி, திருமலைக்குமாரசுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் அருணாச்சலம், கோயில் உதவி ஆணையர் கோமதி, தலைமை எழுத்தர் லெட்சுமணன், வீரபாகு பட்டர், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்..



வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி அடுத்த வள்ளலார் பூங்கா அருகில் ஐஸ் பே கடை திறப்பு விழா நடைபெற்றது இதில் ஐஸ் பே கடை உரிமையாளர் பாபு தொழிலதிபர் பரத் மற்றும் வாடிக்கையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சரஸ்வதி பூஜையை யொட்டி,கடலூர் மாவட்டம்,நெய்வேலி ஸ்ரீ அருள்மிகு துர்க்கை அம்மன் கோவிலில், ஒவ்வொரு வருடமும் ஜெ.வி.யின் குறிஞ்சி பண்ணிசை பயிலகம் நடத்தும் ஆன்மீக இசை விழா நடைபெறுவது வழக்கம்.இந்நிலையில்,நேற்று மாலை அருள்மிகு துர்க்கை அம்மன் சன்னதியில் சிறப்பு பூஜைகள் செய்து ,தீபாராதனை நடைபெற்று இசை விழா துவங்கியது.குறிஞ்சி பண்ணிசை பயிலக இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்று ஆன்மீக பக்தி இசை பாடல்களைப் பாடி காண்போரை வியப்பில் ஆழ்த்தினர்.கோயில் நிர்வாக குழுவினர் மற்றும் குறிஞ்சி பண்ணிசை ஆசிரியர்களான ஜெயந்தி, பிரபாகரன் மற்றும் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.சரஸ்வதி பூஜையையொட்டி, நடைபெற்ற இந்த ஆன்மீக இசை விழாவை, அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கண்டு களித்தனர்



விருத்தாசலம் நகர தொண்டரணி அமைப்பாளராக பூந்தோட்டம் ராஜா ஆகிய என்னை நியமனம் செய்த தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அவர்களுக்கும் விருத்தாசலம் நகர கழக செயலாளர் தண்டபாணி அவர்களுக்கும் விருத்தாசலம் நகர மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ் அவர்களுக்கும் நேரில் சென்று சந்தித்து நன்றி கூறி வாழ்த்து பெற்றார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் வெற்றி பெற்று மாநில அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு செல்லும் வீரர், வீராங்கனைகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வாழ்த்தி, விளையாட்டு ஆடைகளை வழங்கி, பேருந்தை கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார். இதில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சேதுராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வாயலூர் 2ஜ660 மெ.வா. எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் மிக உய்ய அனல் மின் திட்டப் பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளின் போது எதிர்பாராத விதமாக நடைபெற்ற விபத்தினால் 9 வடமாநிலத்தவர்கள் உயிரிழந்த நிகழ்விடத்தை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விவரங்களை கேட்டறிந்தனர்.இதில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் பகிர்மான கழக தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் மா.கோவிந்தராவ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப் மற்றும் மின்வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி நகராட்சிக்குட்பட்ட வடக்குரதவீதியில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச்சிலைக்கு காந்திஜெயந்தியை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர். மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் தென்காசி நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் கலந்து கொண்டார்

# ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம், ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் இலவச கல்வி வழங்கும் சேவை திட்ட துவக்க விழா




வேலூர் அக் 03 வேலூர் மாவட்டம், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம், ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் இலவச கல்வி வழங்கும் சேவை திட்டம் துவக்க விழா, ஸ்ரீ சக்தியம்மா எஜிகேஷனல் டிரஸ்ட் மூலம் ஆண்டுக்கு 50 மாணவர்களுக்கு இலவசமாக நோயாளிகள் பராமரிப்பு குறித்து துவக்க விழா நாராயணி மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர். பாலாஜி தலைமையில், டாக்டர்.கீதா வரவேற்புரை யாற்றுகையில் இவ்விழா நடைபெற்றது. இதில் அழைப்பாளராக அனைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், கலந்து கொண்டு குத்துவிளக் கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் திமுக ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், திமுகவினர் சிட்டிபாபு, மருத்துவமனை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





வேலூர் மாவட்டம், லத்தேரி இரயில்வே கேட் அருகில் சிங்கம் முல்லை குரூப்ஸ் சார்பில் ஆர்.ஆர்.நகர் வீட்டுமனைகள் விற்பனை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்ஆர்.ஆர்.நகர் வீட்டுமனைகள் உரிமையாளர் முபீத்தாஜ் சுல்தான்பாஷா அன்னங்குடி ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திக் இர்பான்பாஷா லட்சுமணன் ராஜா மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்



வேலூர் மாவட்டம் காட்பாடி குடியாத்தம் சாலையில் உள்ள ஆட்டோ ஓட்டுநர் நலச்சங்கத்தில் ஆயுதபூஜை விழா விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு கிளித்தான்பட்டரை ஊர் நாட்டாண்மை வினாயகம், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பூஜைகள் செய்து இனிப்பு வழங்கி வாழ்த்தினார். ஆட்டோ நல சங்க தலைவர் கார்த்திக்கேயன், துணைத்தலைவர் பெருமாள், செயலாளர் முத்துக்குமார், பொருளாளர் வினோத்குமார், உறுப்பினர்கள் பழனி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# விஜயகாந்த் போல் மக்களை பாதுகாக்க தொண்டர் படை விஜய் அமைக்க வேண்டும் என்று சிவ பக்த சேனா ஆன்மீக பகுத்தறிவு அறக்கட்டளை நிறுவனர் வேண்டுகோள்



திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்தவர் சிவக்குமார் இவர் சிவ பக்த சேனா பகுத்தறிவு அறக்கட்டளையை நிறுவி சிவன் கோயில்களை ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் இவர் இன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் உள்ள முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுக் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து விட்டு பத்திரிகையாளர்களை சந்தித்து பேசினார் அப்போது அவர் கூறுகையில் சமீபத்தில் கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் அனைவரையும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கி உள்ளது. இந்த சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்ற விவாதம் நடைபெற்று வருகிறது இந்த சம்பவத்திற்கு இரண்டு தளபதிகளும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். விஜய் தரப்பில் இடம் குறுகளாக கொடுத்தது தான் காரணம் என கூறுகின்றனர் ஆனால் அரசு தரப்பில் அவர் தாமதமாக வந்தது தான் காரணம் என கூறுகின்றனர் விஜய் புதிதாக அரசியலுக்கு வருகிறார் ஒரு படப்பிடிப்பின் போது தாமதமாக இதுவரை சென்றாரா என்று கேள்வி எழுப்பினால் கண்டிப்பாக இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் ஷூட்டிங்கில் தாமதம் என்றால் அதன் இழப்பீடு என்ன என்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும். காமராஜரை மேற்கோள்காட்டி பேசுகின்றனர் அவ்வாறு பேசுகிறேன் காமராஜர் என்பவர் நேரம் தவறாமல் நடக்கக் கூடியவர் அவ்வாறு இருக்கையில் அதனை இவர்கள் பாலோ செய்திருக்க வேண்டும் அதேபோன்று அரசு தரப்பை பொறுத்த அளவில் எனக்கு ஓட்டு போட்டவர்கள் மட்டுமல்ல எனக்கு ஓட்டு போடாதவர்களுக்கும் நான்தான் முதலமைச்சர் என ஸ்டாலின் கூறுகிறார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது விஜய் ரசிகர்களுக்கும் விஜயை தேடி வருபவர்களுக்கும் அவர் முதல்வராக இல்லையா என்று கேள்வி எழுகிறது. இவர்களது பாதுகாப்பு பணிகளை முறைப்படி செய்திருந்தால் இந்த விபத்து தடுக்கப்பட்டிருக்கும். அதேபோன்று இரு தரப்பிலிருந்து நிவாரணங்கள் அறிவிக்கின்றனர் அரசு தரப்பில் 10 லட்சம் விஜய் தரப்பில் 20 லட்ச ரூபாய் அறிவித்துள்ளார். மாற்று அரசியலை கொடுக்கக் கூடிய சூழ்நிலைக்கு வருவதாக கூறும் விஜய் அரசு அறிவித்த தொகை விட அதிக நிவாரணத் தொகை அறிவிக்கிறார் அதாவது நானும் மற்ற அரசியல்வாதி போல் தான் செயல்படுகிறேன் என்று சொல்கிறாரா அல்லது மாற்று சக்தியாக இருப்பேன் என்று கூறுகிறாரா என்பது தெரியவில்லை. ஈரோடு சார்ந்த மோகன் என்பவரது கண் பார்வையற்ற தாய் தனது ஒரே மகனை இழந்து தவிக்கிறார் அவரை தத்தெடுத்து கொள்ளுமா தத்தெடுத்துக் கொள்வது என்பதும் ஒரு நல்ல அரசியல் தான் எத்தனையோ பேர் வெளிநாட்டில் இருந்து வந்து மக்களை தத்தெடுக்கின்றனர் அதேபோன்று ஆதரவில்லாமல் இருப்பவர்களை தத்தெடுத்துக் கொண்டால் புதிய அரசியலாக இருக்கும். இரு தரப்பினரும் அவர்களது ஈகோ கலை தவிர்க்க வேண்டும் என்று கூறினார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் காயம் பட்டவர்கள் பூரண குணமடைய எல்லாம் வல்ல சிவனை வேண்டிக் கொள்வதாக தெரிவித்தார் மேலும் விஜயகாந்த் இது போன்ற அவர்கள் தொண்டர்கள் பொதுமக்கள் என பலரும் கூட்டம் கூடுகையில் அவர்களை கட்டுப்படுத்தும் விதமாக தொண்டர் படையை வைத்திருந்தார் விஜய் ஏன் அவ்வாறு ஒரு தொண்டர் படை உருவாக்கக் கூடாது என்ற கேள்வி எழுப்பினார். எனவே இனிவரும் காலங்களில் நேரம் தவறாமல் விஜய் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

# அரியலூரில் 82 ஆண்டுகளுக்குப் பின் ஸ்ரீகோதண்டராமசாமி பெருமாள் திருக் கோயில் தேரோட்டம்




அரியலூர் அரியலூரில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாடிலுள்ள ஆலந்துறையார் கோதண்டராமசாமி கோயில் 82 ஆண்டுகளுக்கு பிறகுதேரோட்ட விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. தேரோட்டத்தை யொட்டி இந்துசமயஅறநிலையத்துறை சார்பில் ரூ.15.50 லட்சம், பொதுமக்கள் சார்பில் ரூ.3.10 லட்சம் என மொத்தமாக ரூ.18.60 லட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டது. இதையடுத்து தேரோட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வந்தன. தொடர்ந்து தேரோட்டத்தை யொட்டி செப்.23 ம் தேதிகொடியேற்றத்துடன் விழா தொடங்கி யது. தொடர்ந்து நாள்தோறும் இரவு நேரங்களில் பல்வேறு வாகனங்களில்கோதண்டராமசாமி பெருமாள் எழுந்தருளி திருவீதியுலா நடைபெற்றது. முக்கிய விழாவான தேரோட்டம் நேற்று காலை நடைபெற்றது. தேரோட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சார த்துறை அமைச்சர் சா.சி .சிவசங்கர், மாவட்ட கலெக்டர் பொ.ரத்தின சாமி, சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேவஷ் பா.சாஸ்திரிஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, திருப்பணி குழுவினர் மற்றும் பொதுமக்களுடன் சேர்ந்து தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர். தேர் தேரடியிலிருந்து புறப்பட்டு, மாதா கோயில், சத்திரம் வழியாக முக்கிய வீதிகளில் பயணித்து மீண்டும் தேரடியை வந்தடைந்தது. திருத்தேரில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீ கோதண்டராமசாமி பெருமாள் அலங்கார கோலத்தில் எழுந்தருளி, சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வருகை தந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருள் பாலித்தார். விழாவில் இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர்ஜோதி,கல்லங்குறிச்சி ஸ்ரீ கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தா கோ.வெங்கடஜலபதி, படையாச்சி ,உதவிஆணையர் (கூ பொ) லெட்சுமனன், அரியலூர் வருவாய் கோட்டாட் சியர் பிரேமி , நகர செயலாளர் இரா .முருகேசன், நகர்மன்ற தலைவர். சாந்தி கலைவாணன், நகர் மன்ற துணை தலைவர் தங்க கலியமூர்த்தி , வட்டாட்சியர் முத்துலெட்சுமி, திருப்பணிக்குழு கமிட்டிஏபிஎன் சுதாகர் , இராசி . செங்குட்வன், அ . இராம தாஸ் ,எஸ்சி எஸ் சீத்தாராம சுப்பிரமணியன், எஸ் ஆர் ஸ்ரீதர், டி. செங்குட்டுவன், இராம .மனோகரன், டி சத்தியமூர்த்தி, அ. கச்சியப்ப சிவம், ஏ மணிவண்ணன், எஸ் ஷங்கர், எஸ் ஜெயராமன், ஆர் ரங்கநாதன், ஆர் சரவணன்,என் செல்வக்குமரன்,பி.தண்டபாணி, எஸ் வெங்கடசன்,ஏ சுரேஷ் பாபு, ஜெமின் ஆர். வெங்க டேசன் , நகர திமுக பொருளாளர் மா. இராஜேந்திரன், இந்து சமய அறநிலையத் துறை ஆய்வாளர் சதீஸ்குமார், கோயில் செயல் அலுவலர் சரவணன், மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.





கிருஷ்ணகிரி: மனிதநேய வழக்கறிஞர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் இன்று (அக். 2) கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில செயலாளர் முஜீபுர் ரகுமான் தலைமை வகிக்க, மாநில பொருளாளர் முகமது உசைன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாநில துணை செயலாளர்கள் முகமது இம்ரான் ஃபைஸ் மற்றும் சையயது அபுதாஹிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முக்கிய விருந்தினராக மனிதநேய மக்கள் கட்சி தலைவர் மற்றும் பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா பங்கேற்று சிறப்புரையாற்றினார். முன்னதாக, மக்கள் கண்காணிப்பகம் இயக்க தலைவர் வழக்கறிஞர் ஹென்றி திபென் உரையாற்றினார். தனது உரையில், "வழக்கறிஞர்கள் துணிவுடனும், நேர்மையுடனும் செயல்பட வேண்டும். காவல் நிலையங்களில் நடைபெறும் மரணங்களை தடுக்கும் பணியிலும் வழக்கறிஞர்கள் முக்கியப் பங்கு வகிக்கலாம்" எனக் கூறினார். பத்திரிகையாளர்களிடம் பேசிய பேராசிரியர் ஜவாஹிருல்லா, "நடிகர் விஜய் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறார். அவரை இயக்குவது பாஜகதான்" என கருத்துத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் அப்துல்சமது, மாநில பொருளாளர் கோவை உமர் பாதுஷா, பொது செயலாளர் ஹாஜா கனி, துணைப் பொது செயலாளர்கள் யாக்கூப், பாதுஷா, மாநில அமைப்பு செயலாளர் ஷேக் முகமது அலி, மூத்த வழக்கறிஞர் அன்வர், தர்மபுரி மாவட்ட தலைவர் சுபைதார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் நூர்முகமது நன்றியுரையாற்றினார்



பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று உத்தமர் காந்தியடிகள் 157 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள உத்தமர் காந்தியடிகள் திருவுறுவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் திருவண்ணாமலை நாடாருமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மற்றும் மற்றும் செங்கம் சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன் திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன். திமுக மாநகர செயலாளர் கார்த்திக் வேல்மாறன் ஆரஞ்சு ஆறுமுகம் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காந்தி சிலை வளாகத்தில் உள்ள நகர் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 156 ஆவது காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. முன்னதாக நகர் காங்கிரஸ் கமிட்டி தலைவரும், நகர் மன்ற உறுப்பினருமான திரு புருஷோத்தமன் அவர்களின் தலைமையிலும், வட்டாரத் தலைவர் காசி ராமலிங்கம் முன்னிலையிலும் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திய பின்னர் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி காந்தி ஜெயந்தி விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மாவட்ட, வட்டார, நகர, பேரூர் மற்றும் ஊராட்சிகளில் உள்ள மகிளா காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், சிறுபான்மைத்துறை காங்கிரஸ், இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ், சேவாதளம், எஸ்.சி/எஸ்.டி பிரிவு காங்கிரஸ், மாணவர் காங்கிரஸ் கமிட்டிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




நவராத்திரி இறுதி நாளான நேற்று பவானி காவேரி வீதியில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் நவராத்திரி இறுதி யாகம் நடைபெற்றது இதில் ஏராளமான பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# உலக முதியோர் தினம்



மதுரை, சிம்மக்கல் முதியோர் இல்லத்தில் உலக முதியோர் தினம் இல்ல மேலாளர் கிரேசியஸ் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் சமூக ஆர்வலரான ஷேக் மஸ்தான் மற்றும் நூருல்லாஹ் கலந்து கொண்டு, உலகம் முழுவதிலும் உள்ள பெரியோர்கள் இல்லம் மற்றும் சமூகத்திற்கு செய்த பணிகளை நினைவுகூர்ந்து மரியாதை செய்யும் விதமாக இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை விளக்கி, இல்லத்தில் உள்ளவர்களோடு கேக் வெட்டி கொண்டாடினர். பொதுமக்களும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்

# வாரச்சந்தை பகுதியில் அனுமதியின்றி மர்ம நபர்களால் அமைக்கப்பட்ட தகரக் கொட்டகை அகற்ற வியாபாரிகள் கோரிக்கை





பென்னாகரம், அக் 3 தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வாரச்சந்தையானது செவ்வாய் கிழமைகளில் போலீஸ் ஸ்டேஷன் எதிரே கூடுகின்றது.இந்த சந்தைக்கு சேலம், கிருஷ்ணகிரி, அஞ்செட்டி, ராயக்கோட்டை, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறுபகுதிகளிலிருந்து கால்நடைகளை சந்தைப்படுத்தவும், பென்னாகரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விளைவிக்கக்கூடிய காய்கறிகளை சந்தைப்படுத்தவும் ஏராளமான வியாபாரிகள் வந்து செல்லுகின்றனர்.இந்த நிலையில் பழமை வாய்ந்த பென்னாகரம் வாரச்சந்தையை புதுப்பிக்கும் வகையில் கலைஞரின் நகர்புறம் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையுடன் கூடிய 3ஜ்2 அளவுகளுடன் 224 கும் மேற்பட்ட சிறிய அளவிலான கடைகள்,பேவர் பிளாக் நடைபாதை உள்ளிட்ட வசதிகளுடன் கடந்த சில மாதத்திற்கு முன்பு காணொளி காட்சி மூலம் தமிழக முதலமைச்சரால் திறக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட வாரச்சந்தையில் காய்கறிகடை, பழக்கடை, மிளகாய் கடை,மளிகை கடை அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு கடைகள் விற்பனைக்காக வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட வார சந்தையில் இரவோடு இரவாக மர்ம நபர்கள் தகர சீட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். குப்பை தொட்டிகள் வாரச்சந்தை பகுதியில் வைக்காததால் பல்வேறு இடங்களில் காய்கறி கழிவுகள் காணப்படுகின்றன.இந்த காய்கறி கழிவுகளால் துர்நாற்றம் வீசி வருகிறது . இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் முகம் சுழிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது. வாரச்சந்தை பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பொது சுகாதார கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. முறையாக பராமரிக்காததால், கழிப்படத்தின் கதவுகள், தண்ணீர் பைப், டைல்ஸ் உடைக்கப்பட்டுள்ளதால், சந்தைக்கு வருபவர்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. வாரச்சந்தை பகுதியை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிக்கு அருகில் கட்டப்பட்ட பொது சுகாதார கழிப்பிடத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு இடையில் செல்லக்கூடிய சாக்கடை கால்வாயில் செல்வதால் அந்தபகுதியில் துர்நாற்றம் வீசி நோய் பரவும் அபாய நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் கழிப்பிடத்தை பயன்படுத்தாமல் வாரச் சந்தை பகுதியில் இரவு நேரங்களில் இயற்கை உபாதைகளை கழிக்கின்றனர்.புதிதாக அமைக்கப்பட்ட மேற்கூரை கட்டடத்தின் ஒருசில பகுதிகளில் மட்டும் தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதால், சில இடங்களில் இருள் சூழ்ந்துள்ளது. இதனை பயன்படுத்திக் கொண்டு மது பிரியர்கள் இரவு நேரங்களில் தாங்களாகவே தார்ப்பாய்களைக் கொண்டு குடிசை அமைத்து மது அருந்தும் இடமாக மாற்றி வருகின்றனர். மேலும் வியாபாரிகளுக்கு இடையூறாக உள்ள தகர சீட்டை அகற்றி, கழிவறையை சீரமைத்து, துர்நாற்றம் வீசும் குப்பைகளை அகற்ற வேண்டும் என வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வவேலு நேற்று திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலை சுற்றியுள்ள மாடவீதிகளில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக கான்கிரீட் தளம் மற்றும் மாநகராட்சி சார்பாக கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்றதை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் குபிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் , திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திமுக மாநிலம் மருத்துவ அணி துணைத் தலைவர் எ.வ .வே கம்பன் மற்றும் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி , மாநகராட்சி மேயர் நிர்மலா கார்த்திக் வேல் மாறன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன் மாநகரச் செயலாளர் கார்த்திக் வேல்மாறன், ஆரஞ்சு ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர். திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாடவீதியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக முதற்கட்டமாக ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் 01 கிமீட்டர் தொலைவிற்கு நவீன இயந்திரம் கொண்டு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 17 கிமீட்டர் தொலைவிற்கு கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணியை பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு பணிகள் விரைவாகவும் தரமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்பதை கண்காணித்து வருகிறார்கள் அதன்படி மாடவீதிகளை சுற்றி நெடுஞ்சாலை துறை மூலமாக கான்கிரீட் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், மாநகராட்சி சார்பாக மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருவதையும் கள ஆய்வு மேற்கொண்டார். மீதம் உள்ள பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் துரிதமாகவும் தரமாகவும் விரைந்து முடிக்க வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வுகளில் திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (காப) கௌதமன், திருவண்ணாமலை வட்டாட்சியர். நெடுஞ்சாலைத்துறையினர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.737.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்து, 50752 பயனாளிகளுக்கு ரூ.4268 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.

இராமநாதபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.73788 கோடி மதிப்பீட்டில் முடிவற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், இராமேஸ்வரம் பரமக்குடி, கிளியூர், ஆனந்தூர், கீழதூவல். முதுகுளத்தூர் வடக்கு. முதுகுளத்தூர் தெற்கு, மேலக்கொடுமலூர், நயினார்கோவில், சாயல்குடி ஆகிய இடங்களில் 2 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் மற்றும் எஸ்.அண்டக்குடி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் குடியிருப்பு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், நயினார்கோவில், கோவிலாங்குளம். பரமக்குடி ஆகிய இடங்களில் 10 கோடியே 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் சமூக நீதி விடுதிகள். பள்ளிக் கல்வித் துறை சார்பில், 9 கோடியே 92 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் நபார்டு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், தங்கச்சிமடம், எஸ். கொடிக்குளம், நம்புதாளை, பெருங்குளம். தொருவளூர், கடலாடி ஆகிய அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் தொண்டி, ஏர்வாடி ஆகிய இடங்களில் கிளை நூலகங்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், வேதாளை, செம்படையார்குளம், எல்.கருங்குளம், இருவேலி ஆகிய இடங்களில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்கள், தோட்டக்கலைத் துறை சார்பில், உச்சிப்புளி அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட அரசு தென்னை நாற்றங்கால் பண்ணை மேம்படுத்தும் பணி, நீர்வளத் துறை சார்பில், பரமக்குடி வட்டம், பி.கொடிக்குளம் ஊராட்சியில் உபரிநீர் கால்வாய் குறுக்கே பகிரணை அமைத்து 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அகரம் கண்மாய்க்கு புதிய பாசன கால்வாய், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், 39 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம். இராமேஸ்வரம் மற்றும் பரமக்குடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச் சந்தைகள் மற்றும் அறிவுசார் மையங்கள், 96 இலட்சம் ரூபாய் செலவில் மண்டபம் பேரூராட்சியில் எருமை தரவை ஊரணி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் ஆகிய பேரூராட்சிகளில் பூங்காக்கள், கூட்டுறவுத் துறை சார்பில், செல்வநாயகபுரம் மற்றும் வெங்கிட்டான்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை 61 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பல்நோக்கு சேவை மையங்கள், ஆதிராவிடர் நலத் துறை சார்பில், பழஞ்சிறை மற்றும் காட்டுபரமக்குடி அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளிகளில் 1 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், கழிவறைகள், ஆழ்துளைக் கிணறு, நெடுஞ் சாலைத் துறை சார்பில், பார்த்திபனூர் கமுதி சாலை முதல் பெரிய பிச்சைப்பனேந்தல் சாலை, முதலூர் சாலை, திருவில்லிபுத்தூர் சிவகாசி விருதுநகர் அருப்புக்கோட்டை திருச்சுழி நரிக்குடி பார்த்திபனூர் சாலை, தேவிப்பட்டினம் நயினார்கோவில் பொட்டவயல் சாலை, முதுகுளத்தூர் வீரசோழன் சாலை ஆகிய இடங்களில் 36 கோடியே 83 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலங்கள், முதுகுளத்தூர் கமுதி சாலை, பார்த்திபனூர் கமுதி அருப்புக்கோட்டை சாலை வரையில் 56 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், கஞ்சியேந்தல், வாழவந்தாள்புரம், வெங்கடேஷ்வரா காலனி உள்ளிட்ட 6 இடங்களில் அங்கன்வாடி மையங்கள், வண்ணாண்குண்டு மற்றும் நைனாமரைக்கான் ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகள், வெள்ளாமரிச்சிக்கட்டி, லாந்தை, தெற்குத் தரவை, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் பல்வேறு பணிகள் என 12 கோடியே 67 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் 54 முடிவுற்றப் பணிகள், என மொத்தம், 176 கோடியே 59 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவிலான 109 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் இன்றைய தினம் திறந்து வைத்தார். இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், கடலாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 8 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணவியர்களுக்கு சமூக நீதி விடுதிக் கட்டடம், பள்ளிக் கல்வித் துறை சார்பில், இராமநாதபுரம், மண்டபம், கடலாடி, திருப்புல்லாணி, முதுகுளத்தூர், ஆர்.எஸ்.மங்கலம், கமுதி நயினார்கோவில், திருவாடானை, பரமக்குடி, போகலூர் ஆகிய இடங்களில் உள்ள தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 42 கோடியே 86 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கழிப்பறைக் கட்டடங்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 7 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொண்டி பேரூராட்சியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொது சுகாதார அலகு மற்றும் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய உள்ளீடுருவி கதிரியக்க ஆய்வகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், திருவாடானையில் 2 கோடியே 31 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வட்ட செயல்முறை கிடங்கு கூடுதல் கட்டடம். வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், வெளிப்பட்டிணத்தில் 11 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட துணை பதிவுத்துறை அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், மங்களக்குடி மற்றும் பெருநாழி ஆகிய இடங்களில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், முதுகுளத்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 3 கோடியே 65 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் புனரமைக்கும் பணிகள், கமுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறை மற்றும் பணிமனை அமைக்கும் பணிகள், கூட்டுறவுத் துறை சார்பில், பாண்டிக்கண்மாய், சாம்பக்குளம், காமன்கோட்டை, அரியனேந்தல் ஆகிய இடங்களில் 1 கோடியே 29 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டடங்கள். நீர்வளத் துறை சார்பில், 36 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சருகனி ஆற்றின் குறுக்கே புதிய அணை, போகலூர் மற்றும் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் களரி கண்மாய் மற்றும் வரத்து கால்வாய் புனரமைப்பு, இராமநாதபுரம் பெரிய கண்மாய் சிதிலமடைந்த கட்டுமானங்களை சீரமைக்கும் பணிகள், பார்த்திபனூர் மதகணை வலது பிரதான கால்வாய் நெடுகையில் தலைமதகு மற்றும் சட்டர்களை மறுசீரமைக்கும் பணிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், பரமக்குடியில் 1 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மண் பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 7 கோடியே 23 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தங்கச்சிமடம், தாமரைக்குளம், கும்பரம், பட்டிணம்காத்தான்தொடக்கப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், பூசேரி ஊராட்சியில் நியாயவிலைக் கட்டடம், நெடியமாணிக்கம் ஊராட்சியில் அங்கன்வாடி மையக் கட்டடம், என மொத்தம், 134 கோடியே 45 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 150 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் இன்றைய தினம் அடிக்கல் நாட்டினார். இராமநாதபுரம் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 17,095 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில், 150 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள்: 201 பயனாளிகளுக்கு பழங்குடியினர் குடும்ப உறுப்பினர் நல வாரிய அட்டை மற்றும் 1409 பயனாளிகளுக்கு வீட்டுமனை இ.பட்டாக்கள் என மொத்தம் 1760 பயனாளிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 10,459 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம், பழுதடைந்த வீடுகள் சீரமைக்கும் திட்டம், முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமான திட்டம், மண்டபம் முகாமில் இலங்கை தமிழர் நலன் திட்டம், மீனவர்களுக்கான வீடுகள் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வீடுகள், தோட்டக்கலைத் துறை சார்பில், 224 பயனாளிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம், ஒரு துளி நீரில் அதிக பயிர் திட்டம், பனை மேம்பாட்டு இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், 242 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள், சீர்மரபினர் உறுப்பினர் அட்டைகள், கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் மற்றும் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் ஆகியவற்றின் கீழ் உதவிகள்,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 76 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவிகள், கூட்டுறவுத் துறை சார்பில், 3,866 பயனாளிகளுக்கு பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு கடன், மீன்வளக் கடன், சுய உதவிக் குழு கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், தாட்கோ கடன், ஆதரவற்ற விதவைக் கடன், பணிபுரியும் மகளிர் கடன், மாற்றுத் திறனாளிகளுக்கான கடன். வீட்டுக் கடன், வீட்டு அடமானக் கடன், சிறுவணிக கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன் ஆகியவற்றின் கீழ் உதவிகள், தாட்கோ சார்பில், 50 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம், பிரதான் மந்திரி அனுசுசித் ஜாதி அபியுதாய் யோஜ்னா திட்டம், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய அடையாள அட்டைகள் ஆகியவற்றின் கீழ் உதவிகள். வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைசார்பில், 1409 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், நுண்ணீர் பாசன திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், 25 பயனாளிகளுக்கு உழவர் சந்தை அடையாள அட்டைகள். மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில், 1590 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள், வேளாண் பொறியியல் துறை சார்பில், 180 பயனாளிகளுக்கு துணை வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம், தனிப்பட்ட விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், சூரிய மின்வேலி, சூரிய ஒளி பம்புசெட், சூரிய கூடார உலர்த்தி அமைக்கும் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உதவிகள், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில், 1590 அட்டைகள், வேளாண் பொறியியல் துறை சார்பில், 180 பயனாளிகளுக்கு துணை வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம், தனிப்பட்ட விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்தல், பண்ணைக்குட்டை அமைத்தல், சூரியமின்வேலி, சூரிய ஒளி பம்புசெட் சூரிய கூடார உலர்த்தி அமைக்கும் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உதவிகள்,மகளிர் திட்டம் சார்பில், 3,740 பயனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் வங்கிக் கடன். தொழிலாளர் உதவி ஆணையர் சமூக பாதுகாப்புத் திட்டம் சார்பில், 4,861 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், பணியிடத்து விபத்து மரணம் ஓய்வூதியம், வீட்டுவசதி ஆகியவற்றின் கீழ் உதவிகள் 44 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், பயனாளிகளுக்கு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள். மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 1952 பயனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம். இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், முதுகு தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர். நலவாரிய உதவித் தொகைகள், திறன்பேசி. காதொலிக் கருவிகள் ஆகியவற்றின் கீழ் உதவிகள். குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை சார்பில், பெற்றோர் இருவர் அல்லது ஒற்றை பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு தொடர் கல்வியை பெற்றிட நிதி ஆதரவுத் திட்டம். தமிழ்நாடு முதலமைச்சர் அன்புக் கரங்கள் திட்டம் ஆகியவற்றின் கீழ் 531 பயனாளிகளுக்கு உதவிகள் மீன் வளத் துறை சார்பில், 2648 பயனாளிகளுக்கு கூண்டு மீன் வளர்ப்பு, அலைகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள் என மொத்தம் 50,752 பயனாளிகளுக்கு ரூ.42.68 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.






திருச்சியில் லால்குடி ஒன்றியத்திற்குட்பட்ட புள்ளம்பாடியில் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுரு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் நிகழ்ச்சியில் காங்கிரஸ் ஜெயபிரகாஷ், கோல்டன் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் இளங்கோவன் முத்துச்செல்வம் கருணாநிதி வழக்கறிஞர் கவியரசன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



சீர்காழியில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடந்தது. மயிலாடுதுறை மாவட்ட நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பாக சீர்காழி கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி அரசு உதவி பெறும் பள்ளி தனியார் பள்ளிகள் என 11 பள்ளிகள் இணைந்து மாபெரும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியானது சீர்காழி புதிய பேருந்து நிலையத்திலிருந்து கடைவீதி வழியாக பழைய பேருந்து நிலையத்தை அடைந்து பின்பு எல்.எம்சி மேல்நிலைப் பள்ளியில் நிறைவு பெற்றது. முன்னதாக சீர்காழி கோட்டாட்சியர் சுரேஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் முதன்மை கல்வி அதிகாரி கார்த்திகேயன் மாவட்ட கல்வி அலுவலர் சாந்தி , முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் வில்லவன் கோதை முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக தொழிலதிபர் பொறியாளர் இ.மார்க்கோனி, முத்து கருப்பன்,பெஸ்ட் கல்வி நிறுவனங்கள்தாளாளர் ராஜ்கமல் சீர்காழி காவல் நிலைய ஆய்வாளர் கமல்ராஜ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் நடராஜன் ஆகியோர் பேரணியை தொடங்கி வைத்தனர் பேரணியில் பங்கேற்ற 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அவற்றை தடுப்பது குறித்தும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கியும் முழக்கங்கள் பதாயங்கள் ஏந்தி பேரணி பங்கேற்றனர்



சேலம் நெய்க்காரப்பட்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.இந்த முகாமை சேலம் மாவட்ட துணை ஆட்சியர் ஜானகி துவக்கி வைத்தார்.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கஸ்தூரி,காயத்திரி, மஞ்சுநாதன்,மோகனா மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார்,மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை நெய்க்காரப்பட்டி செயலாளர் வெங்கடேசன் செய்திருந்தார்.



காந்தி ஜெயந்தி முன்னிட்டு சேலம் பழைய நாட்டாமை கழக கட்டிடம் முன்பு அமைந்துள்ள காந்தி சிலைக்கு தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் கூட்டமைப்பு மாநில தலைவர் நாகா அரவிந்தன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இதில் செயலாளர் மருத்துவர் ஓஷோ முரளி,அமைப்பாளர் கேசவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



காஞ்சிபுரம் விஜயதசமி நாளை முன்னிட்டு பிரவி பன்னாட்டு மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகள் சேர்ப்பதற்காக ஏராளமான பெற்றோர்கள் வந்திருந்தனர் இங்கு இன்று நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஆர்வத்துடன் குழந்தைகள் நெல் பயிரில் கல்வியை துவக்கினர்

Published by **M.HITLERSUNDARRAJAN** Printed by **M.HITLERSUNDARRAJAN** On behalf of **M.HITLERSUNDARRAJAN** Printed at **SEMAN GRAPHICS**, No.7/253, K.V.N.Puram, 2nd street, Kilpauk Gaden,Chennai-600010. and Published From No.8/19,C.G.Colony, 4th Street, 2nd Floor, Kasimedu, Rayapuram, Chennai-600013. Editor **M.HITLERSUNDARRAJAN**